1987 நவம்பர் 10]

பாரூர் ஏரியிலிருந்து பெனுகுண்டாபுரம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டுவரும் பணி.

6—(*வினா எண். 8162) திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பாரூர் ஏரியிலிருந்து பெனுகுண்டா புரம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டுவரும் பணி எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இவ்வாய்க்கால் வெட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. விரைவில் முடித்துவிட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையிலேயிருந்து வாய்க்கால்கள் வெட்டுகின்ற பணி 99 சதவிகிதம் முடிந்து விட்ட தாகச் சொல்கிறார்கள். இப்போது கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திலே தண்ணீர் முழுமையாக இருக்கின்ற காரணத்தால் இந்தப் பருவத்திலே அந்த ஏரிக்கு தண்ணீர் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போலவே, வாய்க்கால்கள் வெட்டும் பணியில் 95 சதவிகிதம் வேலை முடிவடைந்திருக்கிறது. இன்னும் 5 சதவிகிதம் வேலைதான் இருக்கிறது. அது காலதாமதமானதற்கு பல்வேறு காரணங்கள் —அங்கே இருப்பவர்கள் நிலம் தராததினாலேயும், நிறைய பாறைகள் இருந்ததனாலேயும் காலதாமதம் ஆகிவிட்டது. அதை விரைவிலேயே முடித்து ஏரிக்குத் தண்ணீர் வரத்து செய்வதற் கான வேலைகளை இந்த இலாக்கா செய்யும்.

டாக்டர் கே. சமாசம்: பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பாரூர் ஏரியிலிருந்து பெனுகுண்டாபுரம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு செல்லக்கூடிய இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? இது எப்போது முடியும்?

தாமதத்திற்கு என்னென்ன காரணங்கள்? இதனுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1981-லே ரூ. 22.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1985-ல் அது முடிக்கப்பட்டாகியிருக்க வேண்டும். ஆனால் பணி ஆரம்ப காலத்திலே நிலப் பட்டாதாரர்கள் சம்மதம் தெரிவிக்க மறுத்தார்கள். முதல் பிரிவிலே 11 மீட்டர் ஆழம் வெட்ட வேண்டி இருந்தபோது, பெரிய கடின பாறைகள் அமைந்து விட்டன. கடின பாறைகளை உடைப்பதற்கு வெடி மருந்துகள் கிடைக்காமல் போய் அதிலே சங்கடப்பட்டோம். அவ்வப்போது மழைக் காலங்களிலே, 11 மீட்டர் வரையிலே வெட்டப்பட்ட கால்வாய்களில் தண்ணீர் முழுமையாக வெளியேற முடியாமல், வேலை செய்ய முடியாமல் சிரமங்கள் ஏற்பட்டன. மேற்கூறிய இடர்ப்பாடுகளின் காரணமாக ஒப்பந்தக்காரர்கள் வேலையை விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். தற்போது வேறு ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்பட்டு 95 சதவீத வேலை முடிந்து இருக்கிறது.

திரு. எச் ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1981-லே 22.50 இலட்சம் ரூபாயில் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதாகச் சொன்னார்கள். அத் திட்டம், மாண்புமிகு திரு. குழந்தைவேலு அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்தில், 1980-ல் புரட்சித் தலைவர் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. ஆனால் குத்தகைதாரர்கள் அந்தக் கால்வாய்களை வெட்டுகின்ற நேரத்தில், சொகுசாக இருந்த இடங்களிலெல்லாம் வேலைசெய்து விட்டு, மற்ற இடங்களில் பாறைகள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்லி, கடினமான இடங்களை விட்டுவிட்டுச் சென்றார்கள். ஆகவே குத்தகைதாரர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி தெரியாது, அதுபற்றி கேட்டு, நடவடிக்கை எடுக்கக்கூடியதானால், நடவடிக்கை எடுக்கப்படும்.